2013 மார்ச் 28]

98—

கால்நடை கிளை நிலையம்

***17602—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் ஒன்றியம், எருமலைநாயக்கன்பட்டி பகுதியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பெற வேண்டும் என்று சொன்னால், அந்தப் பகுதியில் 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும் என்பதும், 3 கி.மீ. தூரத்திற்கு எந்தவித கால்நடை கிளை நிலையமும் இருக்கக்கூடாது என்பதும் அரசின் விதிமுறைகள். நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டிருப்பதால், நமது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக ஒரு கால்நடை கிளை நிலையத்தினை எருமலைநாயக்கன்பட்டி பகுதியில் அமைக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் ஒன்றியம், எருமலைநாயக்கன்பட்டியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், அதுவொரு கிராமப் பகுதியாக இருந்தாலும், ஒரு பெரிய கிராமம் ஆகும். ஏறத்தாழ 2,450 பசு மற்றும் எருமை மாடுகளும் 2,250-க்கும் மேற்பட்ட வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளும், 24,000 கோழி வளர்ப்புப் பண்ணைகளும் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அங்கு கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கான எல்லாத் தகுதிகளும்*

இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் மருந்தகத்தோடு இணைந்த ஒரு கால்நடை மருத்துவமனையை அங்கே துவக்குவதற்குத் தேவையான அளவிற்கு கால்நடைகள் இருக்கின்றன. இது மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. மக்களும் அதில் மிகவும் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். கால்நடை துறையோடு நான் பேசியபோது அவர்களும் அதற்குரிய எல்லா ஏற்பாடுகளுடன் இருக்கிறார்கள். நாங்களும் அதற்கு உதவி செய்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் பரிந்துரை செய்ய தயாராக இருக்கிறார்கள். கடந்த ஆண்டும் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அப்பகுதி கிராம மக்களின் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் ஒன்றியம், எருமலைநாயக்கன்பட்டி பகுதியில் ஒரு கால்நடை கிளை நிலையத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அமைத்துத் தருவார்கள் என்று சொல்லிக்கொள்வதோடு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கோரிக்கையினைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே பதிய வைக்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் அதற்குப் பரிந்துரை செய்ததற்கு அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இருவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*